**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 56/ந/2021
நாள்.13.04.2022

திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன்,
கடையநல்லூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி. – எதிர்மனுதாரர்

கடையநல்லூர், மேலகடையநல்லூர் பவுண்டு கீழத் தெரு, 3/9 என்ற எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன் என்பவரின் 13.07.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.07.2021 அன்று பெறப்பட்டு 56/ந/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமாக பரிசீலினை செய்யப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கடையநல்லூர், மேலகடையநல்லூர் பவுண்டு கீழத் தெரு, 3/9 என்ற எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன் என்பவர் தமது முறையீட்டு மனுவில்:

"கடையநல்லூர் நகராட்சியில் 33 வார்டுகள் உள்ளன. இங்குள்ள 29 ஆயிரம் குடியிருப்புகளில் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். மக்களின் குடிநீர் தேவைக்காக ஏற்கனவே 13 ஆயிரத்து 971 வீட்டு குடிநீர் இணைப்புகள் இருந்தன. கடையநல்லூர் நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகள் நடைபெற்று வந்த காரணத்தினால் பயானாளிகளுக்கு புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவது கடந்த 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2018ஆம் ஆண்டு குடிநீர் அபிவிருத்திப் பணிகள் முடிவடைந்ததால் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்க நகராட்சி நிர்வாக இயக்குனர் உத்தரவின் பேரில் நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டது. புதிய குடிநீர் இணைப்பு வழங்க வைப்பு தொகையினை நகராட்சி நிர்வாகம் உயர்த்தியது. அதன்படி குடியிருப்பு பகுதிகளுக்கு ரூ.6,000/–மாக இருந்த வைப்பு தொகை ரூ.7,500/–ஆகவும், வணிக மற்றும் தொழிற்சாலைகளுக்கு ரூ.10,000/–ல் இருந்த வைப்பு தொகை ரூ. 15,000/–மாகவும் உயர்த்தப்பட்டது. இது குறித்த குடிநீர் விநியோக உபவிதிகள் தீர்மானம் கடந்த 2018–ஆம் ஆண்டு ஜுலை மாதம் அங்கீகரிக்கப்பட்டது. பொதுவாக குடிநீர் விநியோக உபவிதிகள் பொதுமக்களுக்கு தெரியும் வகையில் அரசிதழிலும் தினசரி நாளிதழிலும் பிரசுரம் செய்ய வேண்டும் என்று விதி உள்ளது. ஆனால் கடையநல்லூர் நகராட்சி அலுவலகம் மூலம் குடிநீர் விநியோக உபவிதிகள் அரசிதழிலோ, தினசரி நாளிதழிலோ வெளியிடப்படவில்லை. இந்நிலையில் அரசு விதிமுறைகளை கடைபிடிக்காமல் பாரபட்சமான முறையில் கடையநல்லூர் நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்படுகிறது. புதிய குடிநீர் இணைப்பிற்கு அதிக அளவு பணம் வசூலிக்கப்படுவதாகவும், குடிநீர் இணைப்பு வழங்குவதில் இடைதரகர்களை பயன்படுத்தி அதிகாரிகள் கொள்ளை லாபம் சம்பாதிப்பதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதுகுறித்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர், திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோருக்கு புகார் மனு அனுப்பியும் எந்த நடவடிக்கையும் இல்லை. எனவே, மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் இதில் தலையிட்டு அரசு விதிமுறைகளை கடைபிடிக்காமல் தன்னிச்சையாக முறைகேடாக பணம் பெற்றுக்கொண்டு புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

2) இம்முறைமன்ற 03.11.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் மனுதாரர் திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன் மற்றும் கடையநல்லூர் நகராட்சி ஆணையர் ஆகியோர் 12.11.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது. 12.11.2021 அன்று கன்னியாகுமரி முகாமில் நடைபெற்ற விசாரணையில் ஆஜரான மனுதாரர் திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன் கீழ்காணுமாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:-

"கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் விதிகளை முறையாக கடைபிடிக்காமல் முறைகேடாக குடிநீர் இணைப்பு தரப்பட்டுள்ளது. இணைப்புகள் வழங்குவதற்கு நகராட்சி அலுவலர்களால் அதிக தொகை வசூலிக்கப்படுகிறது. எனவே,

விதிமுறைகளை மீறியும், அதிக தொகையினை வசூலித்தும் குடிநீர் இணைப்புகளை வழங்கிய நகராட்சி அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்திட இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக 12.11.2021 அன்று என்னால் இம்முறைமன்றத்தில் வழங்கப்பட்டுள்ள 12.11.2021 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரத்தையும் எனது வாக்குமூலமாக இம்முறைமன்றத்தில் பதிவு செய்திடுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார். ஆனால் 12.11.2021 நாளிட்ட கடிதத்திலும் மனுதாரர் தமது 13.07.2021 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ள விவரங்களையே தெரிவித்துள்ளார்.

3) 12.11.2021 அன்று விசாரணைக்கு ஆஜரான கடையநல்லூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) திருமதி.சூ.மு.பாரிஜான் என்பவர் கீழ்காணுமாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:-

"கடையநல்லூர் நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான வைப்புத்தொகையை ரூ.6,000/- லிருந்து ரூ.7,500/- ஆகவும், வணிக பயன்பாட்டிற்கான வைப்புத்தொகை ரூ.10,000/- லிருந்து ரூ.15,000/- ஆகவும் வசூல் செய்ய நகர்மன்ற தீர்மானம் நாள் 24.05.2018 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் குடிநீர் விநியோக உபவிதிகளை அரசு நாளிதழில் பிரசுரம் செய்ய திருத்தங்கள் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்நேர்வு தொடர்பான எனது 11.11.2021 நாளிட்ட கடிதம் மற்றும் அதன் இணைப்புகளில் உள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவுசெய்திடுமாறும் இம்முறை மன்றத்தை கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4) ஆணையர் தமது 11.11.2021 நாளிட்ட அறிக்கையில் கடையநல்லூர் நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு குடியிருப்பு பயன்பாட்டிற்கான வைப்புத்தொகையை ரூ.6,000/- லிருந்து ரூ.7,500/- ஆகவும், வணிக பயன்பாட்டிற்கான வைப்புத்தொகை ரூ.10,000/- லிருந்து ரூ.15,000/- ஆகவும் உயர்த்தி வசூல் செய்ய நகர்மன்ற தீர்மானம் எண்.127, நாள்.24.05.2018ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது சம்பந்தமான அறிவிக்கையை

பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் 14.08.2019 அன்று நாளிதழில் வெளியிடப்பட்டது. இந்நகராட்சி பொதுமக்களின் புதிய குடிநீர் இணைப்பு தேவையினை கருத்திற்கொண்டு அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி குடிநீர் வைப்புத் தொகை மட்டும் வசூலிக்கப்பட்டு புதிய குடிநீர் இணைப்பு முன்னுரிமை அடிப்படையில் தொடர்ந்து தொய்வின்றி வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோக உபவிதிகளை அரசு நாளிதழில் பிரசுரம் செய்ய திருத்தங்கள் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

5) இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரது மனு, விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம், ஆணையரின் அறிக்கை மற்றும் அவர் அளித்த வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகியவை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன.

மனுதாரர் கடையநல்லூர் நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் இணைப்பு வழங்க வைப்புத் தொகையினை குடியிருப்பு பகுதிக்கு ரூ.6,000/– லிருந்து ரூ.7,500/– ஆகவும் வணிக மற்றும் தொழிற்சாலைகளுக்கு ரூ.10,000/– லிருந்து ரூ.15,000/– மாகவும் உயர்த்தியுள்ளார்கள் என்றும் இதுகுறித்து குடிநீர் உபயோக உபவிதிகளை அரசிதழிலும் தினசரி நாளிதழிலும் பிரசுரம் செய்யவில்லை என்று தெரிவித்துள்ளார். ஆணையாளர் தமது அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து குடிநீர் இணைப்பிற்கான வைப்புத் தொகையை உயர்த்தி வசூல் செய்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.127 நாள்.24.05.2018ல் நிறைவேற்றப்பட்டுள்ளதையும் இது சம்மந்தமான அறிவிப்பு பொது மக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் 14.08.2019 அன்று தினதந்தி நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது. மேலும், குடிநீர் விநியோக உபவிதிகளை அரசு நாளிதழில் பிரசுரம் செய்ய திருத்தங்கள் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ள ஆணையாளரின் அறிக்கையிலிருந்து அரசிதழில் வெளியிடவில்லை என்பது தெள்ள தெளிவாகிறது. மேலும் குடிநீர் இணைப்பு முன்னுரிமையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது என தெரிவித்துள்ள ஆணையர், அதற்கான ஆதாரங்களான பதிவேடுகளையோ, பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களையோ இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கவில்லை. எனவே, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தலைமையில் குழு ஒன்றை அமைத்து கடையநல்லூர் நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகள் விதிகளின்படி முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து, விதிமீறல்கள் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும், குடிநீர் இணைப்புக்கான வைப்பு தொகையை உயர்த்துவது குறித்து விதிகளின்படி அரசிதழில் அறிவிக்கை

வெளியிடப்பட உரிய நடவடிக்கை எடுத்திடவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.வே.கணபதிபாலசுப்ரமணியன்,
3/9, பவுண்டு கீழத்தெரு,
மேலக்கடையநல்லூர்,
கடையநல்லூர் 627 751.

2) நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

18/4/22

செயலாளர்.

18/04/22